மாலை முரசு

பக்கங்கள் 14+ 03

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | மார்கழி 29 செவ்வாய்க்கிழமை 13.01.2026 | அதிர்வு 167

## சிரேஷ்ட ஊடகர் இக்பால் அத்தாஸ் இன்று காலமானார்



இலங்கையில் நடந்த போரின்போது கள முனைச் செய்திகளை விவரணங்களாக எழுதிய சர்வதேச 02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# தரம் 6 இற்குரிய கல்வி மறுசீரமைப்பு ஒத்திவைப்பு

## சர்ச்சைகளையடுத்து அரசு அதிரடி முடிவு

“தரம் 6 இற்குரிய கல்வி மறுசீரமைப்பை ஒத்திவைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. உரிய மீளாய்வின் பின்னர் 2027 ஆம் ஆண்டு முதல் மறுசீரமைப்பு நடவடிக்கை இடம்பெறும்.”

– இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு அரசாங்க தகவல் திணைக்களத்தில் இன்று நடைபெற்றது.

இதன்போது நாட்டில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள 02





# முடிவுக்கு வந்தது விமலின் போராட்டம்

## இது அரசியல் நாடகம் என்று கடும் விமர்சனம்



தரம் 6 இற்கான கல்விச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதை ஒத்திவைக்க தேசிய மக்கள் சக்தி அரசு எடுத்த முடிவையடுத்து, முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச உள்ளிட்ட குழுவினரால் முன்னெடுக்கப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டம் இன்று மாலை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சுப் பதவியில் இருந்து 03

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally



# நீர்வேலியில் வாகனம் விபத்து!

## அதில் பயணித்தவர்கள் தொடர்பில் தகவல் இல்லை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று இரவு கப் ரக வாகனம் ஒன்று விபத்துக்குள்ளாகி பஸ் தரிப்பு நிலையத்தையும் மோதித் தள்ளி முற்றாகச் சேதமாக்கியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித் துறை நோக்கிக் பயணித்துக் கொண்டிருந்த இந்தவாகனம்வேகக்கட்டுப்பாட்டை இழந்து நீர்வேலி கந்தசுவாமி கோயில் சந்திப் பகுதியில் உள்ள பஸ் தரிப்பு நிலையத்துக்குள் புகுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இருப்பினும் இந்த வாகனத்தில் பயணித்தவர்கள் தொடர்பாக எவ்வித தகவலும் கிடைக்கவில்லை.

இன்று காலை வாகனத்தை மீட்ட கோப்பாய் பொலிஸார், இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.









## சிரேஷ்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புகழ்பெற்ற சிரேஷ்ட ஊடகவியலாளர் இக்பால் அத்தாஸ் இன்று காலமானார்.

இறக்கும்போது அவருக்கு 81 வயது என்பதுடன், அவர் சிறிது காலம் நோய் வாய்ப்பட்டிருந்தார் என்று தெரிவிக்கப் படுகின்றது.

அவரது பூதவுடல் பொதுமக்கள் அஞ்சலிக்காக இன்று காலை 9 மணி முதல் தெஹிவளையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இறுதிச் சடங்குகள் இன்று மாலை தெஹிவளை பெரிய பள்ளிவாசல் மையவாடியில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச ஊடகங்களிலும் இவர் பணியாற்றியுள்ளார். இலங்கையில் பாதுகாப்புத் துறை செய்திகள், புலனாய்வுச் செய்திகள் என்பவற்றை துணிந்து எழுதக் கூடிய துணிக்கச்மிக்க ஊடகவியலாளராக இவர் செயற்பட்டுள்ளார்.

## தரம் 6 இற்குரிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கல்வி மறுசீரமைப்பு விவகாரம் தொடர்பில் அமைச்சர் கருத்து வெளியிட்டார்.

“தரம் 1 மற்றும் 6 இற்குரிய கல்வி மறுசீரமைப்பு ஆரம்பமாகி இருந்தாலும் தரம் 6 ஆங்கிலப் பாடத் திட்டம் தொடர்பில் சர்ச்சை எழுந்துள்ளது.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்நிலையில் சிலர் இதனை அரசியலுக்காகப் பயன்படுத்தி வருகின்றனர். மேலும் சிலர் தவறான கருத்துக்களை விதைக்கின்றனர். இதனால் கல்வி மறுசீரமைப்பு தொடர்பில் நம்பிக்கையீனம் ஏற்படும். நம்பிக்கையுடன்தான் இந்தப் பணியை முன்னெடுக்க வேண்டும்.

அதனால்தான் கால அவகாசம் வழங்கும் நோக்கில் தரம் 6 இற்குரிய கல்வி மறுசீரமைப்பு 2027 வரை ஒத்திவைக் கப்படுகின்றது. எனினும், தரம் 1 இற்குரிய கல்வி மறுசீரமைப்பு திட்டமிட்ட அடிப்படையில் நடைபெறும்.” – என்றார்.

## முடிவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் ஹரிணி அமரசூரிய விலக வேண்டும் என வலியுறுத்தி தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்சவால் முன்னெடுக்கப்படும் போராட்டம் இன்று இரண்டாவது நாளாகத் தொடர்ந்தது.

கல்வி மறுசீரமைப்பு கைவிடப்பட வேண்டும், கல்வி அமைச்சுப் பதவியைப் பிரதமர் துறக்க வேண்டும் ஆகிய இரு விடயங்களை வலியுறுத்தி கல்வி அமைச்சுக்கு முன்பாக தனது சகாக்களுடன் விமல் வீரவன்ச சத்தியாக்கிரகப் போராட்டத்தை நேற்றுக் காலை ஆரம்பித்திருந்தார்.

பிரதமர் ஹரிணி மீது கடும் விமர்சனங்களையும் அவர் முன்வைத்திருந்தார். அரச சார்பற்ற நிறுவனங்களின் முகவராகப் பிரதமர் செயற்படுகின்றார் என்று அவர் குற்றச்சாட்டுகளையும் சுமத்தியிருந்தார்.

ஐ.நாவுக்கு எதிராக உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி அரசியல் நகைச்சுவையாளராக மாறிய விமலின் இந்தப் போராட்டமும் அரசியல் நாடகம் என்று சமூக வலைத்தளங்களில் விமர்சிக்கப்பட்டது.

நேற்றிரவு 11 மணியளவில் போராட்டக்களத்தில் இருந்து விமல் வீரவன்ச வெளியேறியிருந்தார். இந்நிலையில் இன்று காலை மீண்டும் வந்து போராட்டத்தில் இணைந்திருந்தார். தமது இலக்கை அடையும் வரை போராட்டம் தொடரும் என அவர் சூளுரைத்திருந்தார்.

நாடாளுமன்றத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடும் விமல் வீரவன்ச, அவர் களமிறங்கும் அணியில் முதல் இரு இடங்களுக்குள் விருப்பு வாக்குகளைப் பெறுவார். ஆனால், அரசியல் மாற்றத்தையடுத்து அவர் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவில்லை.

தற்போது பிரதான கட்சிகளுடன் அவர் தரப்பு கூட்டணி உறவையும் பேணவில்லை. அரசியல் ரீதியில் வங்குரோத்தடைந்த நிலையில், பாலஸ்தீனம் தொடர்பில் பாடலொன்றை எழுதி இருந்தார் விமல் வீரவன்ச.

பிறகு அவ்வப்போது ஊடகங்கள் முன் தலைகாட்டுவார். தையிட்டி பிரச்சினையை அடுத்து களத்துக்கு வந்த அவர், தற்போது பிரதமருக்கு எதிரான போராட்டத்தை முழு வீச்சுடன் கையில் எடுத்துள்ளமை அரசியல் இருப்புக்கான போராட்டம் என விமர்சிக்கப்பட்டது.

இந்நிலையில், “தரம் 6 இற்குரிய கல்வி மறுசீரமைப்பை ஒத்திவைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. உரிய மீளாய்வின் பின்னர் 2027 ஆம் ஆண்டு முதல் மறுசீரமைப்பு நடவடிக்கை இடம் பெறும்” என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ இன்று பகல் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்திருந்தார். இதையடுத்து விமல் வீரவன்ச தாம் முன்னெடுத்த சத்தியாக்கிரகப் போராட்டத்தை இன்று மாலை முடிவுக்குக் கொண்டுவந்துள்ளார்.

















# கற்பிட்டி கந்தக்குளி கடலில் 108,480 மருந்து மாத்திரைகள்!

## கைப்பற்றியது கடற்படை

**(கற்பிட்டி நிருபர் சியாஜ்)**

கற்பிட்டி கண்டக்குளி கடல் பகுதியில் திங்கட்கிழமை இலங்கை கடற்படை நடத்திய சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது, சட்டவிரோதமாக நாட்டுக்குக் கொண்டு வரப்பட்ட சுமார் ஒரு லட்சத்து 8 ஆயிரத்து 480 மருந்து மாத்திரைகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன.

வட மத்திய கடற்படை கட்டளையின் இலங்கை கடற்படை கப்பல் விஜயாவின் கண்டக்குளி கடற்படைப் பிரிவால் கண்டக்குளி கடல் பகுதியில் நடத்தப்பட்ட இந்தச் சிறப்புத் தேடுதல் நடவடிக்கையின் போது, குறிப்பிட்ட கடல் பகுதியில் கைவிடப்பட்ட இரண்டு படகுகள் பரிசோதிக்கப்பட்டன. இந்த நடவடிக்கையின் போது, சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டு வர முயற்சித்த கடத்தல்காரர்களால் கைவிடப்பட்ட இந்தமருந்துகள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கையின் மூலம் கடற்படையினரால் மீட்கப்பட்ட மருந்து மாத்திரைகள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காகக் கட்டுநாயக்க சுங்கத் தடுப்பு அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடந்த 2025 ஆம் ஆண்டில், கடற்படையால் நடத்தப்பட்ட நடவடிக்கைகள் மூலம் சட்டவிரோதமாக நாட்டுக்குக் கொண்டு வரப்பட்ட 16 லட்சத்து 83 ஆயிரத்து 722 மாத்திரைகளை கடற்படை கைப்பற்றி, மேலும் சட்ட நடவடிக்கைக்காக அனுப்பியுள்ளது. கடல் வழியாக கடத்தல் உள்ளிட்ட இதுபோன்ற சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுப்பதில் கடற்படை தொடர்ந்து பங்களிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.





# தைத்திருநாளில் மண்பானையின் மகத்துவம்

(எஸ்.நிதர்ஷன்)

தமிழர்களின் பாரம்பரிய தைத் திருநாளில் மண்பானைப் பொங்கல் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. இம்முறை அதிக மக்கள் மண்பானையின் மகத்துவத்தை உணர்ந்து அதனைக் கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

யாழ்ப்பாணம் – கல்வியங்காட்டில் நீண்டகாலமாக மட்பாண்ட தொழிலில் ஈடுபடும் தம்பதியினரின் கடையிலும், தொழிற்சாலையிலும் அதிகளவு வர்ணம் தீட்டப்பட்ட பொங்கல் பானைகளை மக்கள் கொள்வனவு செய்கின்றமையை அவதானிக்க முடிந்தது.

















நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# தீர்வுக்கு வாய்ப்பில்லை

தையிட்டியில் சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்ட திஸ்ஸ விகாரை தொடர்பான பிரச்சினைக்கு சுமுகத் தீர்வு காண்பதற்கான வாய்ப்புகள் அருகி வருகின்றன என்றே தோன்றுகின்றது.

பலவந்தமாக இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்ட தமிழ் மக்களின் காணிகளிலேயே இந்த விகாரை கட்டப்பட்டிருக்கின்றது என்ற உண்மையை - யதார்த்தத்தை - ஆக்கிரமிப்பை மேற்கொண்டுள்ள பேரினவாதிகள் ஒப்புக்கொள்ளாமல் தமது பேரின மேலாதிக்கத் திமிர்த்தனத்துடன் நடந்து கொள்ளும் போது, இந்தப் பிரச்சினைக்கு சுமுகத் தீர்வு காண்பதற்கான வழியே கிட்டாது என்பதுதான் உண்மையாகும்.

யாழ்ப்பாணம் தையிட்டியில் திஸ்ஸ விகாரை அமைப்பதற்காக ஆக்கிரமிக்கப்பட்ட பொதுமக்களின் காணிகளை விடுவிப்பதற்கு, திஸ்ஸ விகாரையின் விகாராதிபதியும் பௌத்த சாசன அமைச்சின் பிரதி நிதிகளும் மறுத்துள்ளனர் எனக் கூறப்படுகின்றது. ஆனால் அமைச்சர் சந்திரசேகரனோ அப்படி அவர்கள் மறுத்துள்ளனர் என்ற செய்தியை மறுதலித்துள்ளார்.

திஸ்ஸ விகாரைக்காக ஆக்கிரமிக்கப்பட்ட காணிகள் தொடர்பில் தீர்மானிப்பதற்காக விசேட குழுவொன்று அமைக்கப்பட்டிருந்தது. அந்தக் குழு கொழும்பில் ஓரிரு தினங்களுக்கு முன்னர் கூடிக் கலந்துரையாடல் நடத்தியுள்ளது.

அதன்போதே, திஸ்ஸ விகாரைக்காக அபகரிக்கப்பட்ட காணிகளை பகுதியளவேனும் விடுவிப்பதற்கு திஸ்ஸ விகாரையின் விகாராதிபதியும் பௌத்த சாசன அமைச்சின் பிரதிநிதிகளும் திட்டவட்டமாக மறுத்தனர் என்று கூறப்படுகின்றது.

காணி முற்றுமுழுதாக விகாரைக்குச் சொந்தம் என்பதால், அதை விடுவிக்கும் எண்ணம் இல்லை என்றும், அவ்வாறு விடுவிப்பது பொருத்தமாக இருக்காது எனவும் அவர்கள் கலந்துரையாடலில் தெரிவித்துள்ளனர் என்று கூறப்படுகின்றது.

திஸ்ஸ விகாரை அமைக்கப்பட்டுள்ள பகுதியைத் தவிர, ஏனைய காணிகளை விடுவிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்று அண்மையில் தகவல்கள் வெளிவந்திருந்தன. அந்தப் பின்புலத்திலேயே பகுதியளவேனும் காணிகளை விடுவிப்பதற்குத் தற்போது திட்டவட்டமாக மறுக்கப்பட்டுள்ளது.

எனினும் சந்திப்பில் காணி விடுவிப்புத் தொடர்பில் மறுக்கப்பட்டமையை மறுதலித்துள்ள அமைச்சர் சந்திரசேகரன் அடுத்த கட்ட கலந்துரையாடல் விரைவில் - பெரும்பாலும் அடுத்த மாதத்தில் - நடைபெறும் என்று கூறியிருக்கின்றார்.

இந்த விவகாரத்தில் ஆக்கிரமிப்பை - அத்துமீறலை - பகிரங்கமாக ஒப்புக்கொள்வதின் மேல்தான் சுமூகமான தீர்வு எதுவும் கட்டி எழுப்பப்பட முடியும். அதனை ஏற்கனவே இப்பத்தியில் சுட்டிக் காட்டி இருக்கிறோம். ஆக்கிரமிப்பு அடாவடித்தனத்தை - அத்துமீறல் அராஜகத்தை - பிடிவாதமாகப் பற்றிக் கொண்டு, தவறிழைத்த தரப்பு ஆட்சி அதிகாரக் கும்பலின் ஆதரவுத் திமிர்த்தனத்தோடு இவ் விவகாரத்தை அணுகுமானால் இந்தப் பிரச்சினைக்கு சுமுகத் தீர்வுக்கு வாய்ப்பே இல்லாமல் போய் விடும்.




# போதை ஒழிப்பு நடவடிக்கை; ஒரு நாளில் 871 பேர் கைது!

**(உடப்பு நிருபர்-க.மகாதேவன்)**

நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டு வரும் போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளின் கீழ், ஒரு நாளில் 871 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று மேற்கொள்ளப்பட்ட 888 சோதனைகளின் போது இந்த கைதுகள் இடம்பெற்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது 08 சந்தேக நபர்களுக்கு எதிராக தடுப்புக்காவல் உத்தரவுகள் பெறப்பட்டுள்ளன.

அத்துடன், கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களில் 09 பேர் புனர்வாழ்வுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இதற்கு மேலதிகமாக, குற்றங்கள் மற்றும் போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகள் மூலம் நாடு முழுவதும் குற்றங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்களைக் கைது செய்வதற்காக, அனைத்து பிரதேச பொலிஸ் நிலையங்களையும் உள்ளடக்கும் வகையில் பிராந்திய மட்டத்தில் விசேட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய நேற்று சந்தேகத்தின் பேரில் 1,018 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 530 பேர் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், குற்றச் செயல்களுடன் நேரடியாகத் தொடர்புடையவர்கள் என அடையாளம் காணப்பட்ட 15 பேரும் இதில் அடங்குகின்றனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.



# பண்டிகைக் காலத்தை முன்னிட்டு சுகாதார பரிசோதகர்கள் நடவடிக்கை

**(மட்டக்களப்பு நிருபர்)**

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் விசேட பரிசோனைகளை இன்று செவ்வாய்கிழமை களுவாஞ்சிகுடி நகரில் முன்னெடுத்திருந்தனர்.

களுவாஞ்சிகுடி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் சுகாதாரப் பரிசோதர்கள், உள்ளிட்ட குழுவினரே இவ்வாறு பரிசோதனைகளை முன்னெடுத்திருந்தனர். இதன்போது பொருள்கள் மற்றும் பண்டங்களின் உற்பத்தித் திகதி, காலாவதி திகதி, பொருள்களின் தரம், போன்ற பல விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்திருந்தனர்.

பட்டிருப்புத் தொகுதியின் வர்த்தக நகராக விளங்கும் களுவாஞ்சிகுடி நகரில் தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் வந்து செல்கின்றனர். இந்த நிலையில் பண்டிகைக் காலங்களில் அந்தப் பகுதியில் சனக்கூட்டம் மேலும் அதிகரித்துக் காணப்படுவதோடு, வியாபாரங்களும் களைகட்டியிருப்பது வழக்கம். இந்த நிலையில் சுகாதார பரிசோதகர்கள் தமது பரிசோதனைகளை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# அமரர் அந்தனி ஜீவாவின் ஓராண்டு நினைவு நிகழ்வு

(அஷ்ரப் ஏ சமத்)

அமரர் அந்தனி ஜீவாவின் முதலாம் ஆண்டு நினைவு மலர் வெளியீடு, முத்திரை வெளியீட்டு நினைவுப் பேருரை என்பன ஞாயிற்றுக்கிழமை கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடை பெற்றன.

பிரதம அதிதியாக பேராசிரியர் ஹனிதும் சுனில் செனவி கலந்து கொண்டார். முன்னிலை இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் வரவேற்புரையை மேமன் கவி, தலைமை பேராசிரியர் வ. மகேஸ்வரன், தொடக்கவுரை ஆழ் வாய்ப்பிள்ளை கந்தசாமி, மலர் வெளி யீட்டுரையைத் தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர், கருத் துரையை முன்னாள் கல்வியமைச்சின் பிரதிப் பணிப்பாளர் எஸ். முரளிதரன் ஆகியோர் நிகழ்த்தினர்.



அந்தனி ஜீவா மலையக அடையா ளத்தின் சமரசமற்றக் குரலும் தமிழ்த் துறை பேராதனைப் பல்கலைக்கழக முனைவருமான ஜெயசீலன் மற்றும் வீரகேசரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஸ்ரீ கஜன் மற்றும் அந்தனி ஜீவாவின் குடும்பத்தினர், அந்தனி ஜீவா ஞாபகார்த்த குழுவினர் மற்றும் எழுத்தாளர்கள் கலந்து கொண்டனர். நன்றியுரை கே. பொன்னுத்துரை நிகழ்த் தினார். நினைவு முத்திரை பிரதம அதிதி யினால் . திருமதி அந்தனி ஜீவாவிடம் கையளிக்கப்பட்டது.





# மாணவர்களுக்கு இலவச மடி கணினி!

(றிபாஸ்)

ஹாஷிம் உமர் பௌண்டேசன் சார்பில் பல்கலைக்கழக மாணவர்களுக்கு இல வசமாக மடி கணினி வழங்கும் வேலைத் திட்டத்தின் 18 ஆம் கட்ட விநியோக நிகழ்வு கொழும்பு, கொள்ளுப்பிட்டியி லுள்ள ஹாஷிம் உமர் பௌண்டேசன் தலைமையகத்தில் நடைபெற்றது.

இதில் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் ஆலோசகரும், மூத்த ஊடக வியலாளருமான என். எம். அமீன்,பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரை யாற்றுகையில்,

“இன்றைய டிஜிட்டல் யுகத்தில் கல்விப் பயணத்தைத் தொடர்வதற்குக் கணினி என்பது அவசியமான ஒன்றாக மாறியுள் ளது. வசதி உள்ளவர்களுக்கு கணினி வாங்குவது சிரமமல்ல. ஆனால், வசதி குறைந்த மாணவர்களுக்கு அது ஒரு பெரிய சவால். அந்தச் சவாலை நீக்கு வதற்காக ஹாஷிம் உமர் மேற்கொண்டு வரும் இந்தப் பணி காலத்தின் தேவை யாகும்.

இதுவரை தொண்ணூறுக்கும் மேற் பட்ட மடிக் கணினிகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இது ஒரு பொரு ளாதார உதவியாக மட்டுமல்ல. மாணவர் களின் வாழ்க்கைப் பயணத்தை மாற்றக் கூடிய முதலீடுமாகும். இந்த உதவி, அவர்களது கல்வி வளர்ச்சிக்கும் எதிர்கால முன்னேற்றத்துக்கும் உறுதியாக துணை நிற்கும் எனத் தெரிவித்தார்.

மாணவர்களுக்கு கணினி வழங்குவது மட்டுமல்லாது, நூற்றுக்கணக்கான எழுத்தாளர்களின் நூல்களை அச்சிட்டு வெளியிடுதல், கல்வி உதவித்தொகைகள் வழங்குதல் போன்ற பல பணிகளை அவர் தொடர்ந்து செய்து வருகிறார். இந்த முயற்சி நூறாவது கட்டத்தை நோக்கி நகர்கிறது என்றும் தெரிவித்தார்.

இந்த மடி கணினியை நீங்கள் ஒரு சாதனமாக அல்ல, ஒரு வாய்ப்பாகக் கருதி பயன்படுத்த வேண்டும். சிறந்த பட்டதாரிகளாக உருவெடுத்து, சமூகத்துக் கும் நாட்டுக்கும் பயனளிக்கும் நபர்களாக மாற வேண்டும். அப்போது இந்த உதவி வழங்கிய அனைவருக்கும் அது பெரு மையாக அமையும் எனறும் தெரிவித்தார்.





# பொங்கல் பொருள்கள் சாவகச்சேரியில் வழங்கல்!

(த.சுபேசன்)

கௌரி சங்கரி தவராசா ஞாபகார்த்த அறக்கட்டளை ஊடாக ஜனாதிபதி சட்டத் தரணி கே.வி. தவராசாவின் நிதிப்பங்க ளிப்பு மற்றும் Nobel Regin Development நிறுவனத்தின் நிறுவுனர் லதன் வரத ராஜாவின் நிதிப் பங்களிப்புக்கள் ஊடாக வயாவிளானில் இருந்து இடம் பெயர்ந்து கைதடி நுணாவிலில் வசிக்கும் மக்களுக்குப் பொங்கல் பொதிகள் வழங்கி வைக்கப் பட்டுள்ளன. சமூக செயற்பாட்டாளர் கல ாநிதி அகிலன் முத்துக்குமாரசுவாமியின் ஏற் பாட்டில் கடந்த 12 வருடங்களாக நடை பெற்று வரும் “அனைவரையும் பொங்க வைப்போம்” செயற்றிட்டத்தின் தொடர்ச் சியாக இவ்வருடம் மேற்படி உதவித்திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் Nobel regin development நிறுவனத்தின் நிறுவுனர் லதன் வரதராஜா, சூழகம் அமைப்பின் செயலாளர் கருணாகரன் நாவலன் மற் றும் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற சமுதாய சீர்திருத்த அபிவிருத்தி உத்தி யோகத்தரும் சமூக சேவையாளருமான க.ரஜனிகாந்தன் ஆகியோர் கலந்து கொண்டு பொங்கல் பொதிகளை வழங்கி வைத்தனர்.






# தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் ரயர் வெடித்ததில் லொறி விபத்து!

(உடப்பு நிருபர் - க.மகாதேவன்)

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் 65.7 ஆவது கிலோ மீற்றர் கல் அடையாள பகுதியில், மாத்தறை நோக்கி பயணித்த லொறியின் முன் சில்லு ரயர் வெடித்ததால் லொறி கட்டுப்பாட்டை இழந்து நடு வீதிக்கு நுழைந்து விபத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனுடன் பின்னால் வந்த சொகுசு பஸ்ஸொன்று லொறியின் மோதியதால், இன்று காலை இந்த விபத்து நிகழ்ந்தது. மோதியதில் நிலைதடுமாறிய லொறி வாகனம் இடது பக்க பாதுகாப்பு வேலியை கடந்து கீழே கவிழ்ந்து வீழ்ந்து விபத்துக்குள்ளானது.



# கடலரிப்பால் பாதிக்கப்பட்டுள்ள உடப்பு கிராமத்தின் கரையோரம்

(உடப்பு நிருபர் - க. மகாதேவன்)

புத்தளம் மாவட்டம் உடப்பு கிராமத்தில் உள்ள கடலோரப் பகுதியானது அண்மைக் காலத்தில் மிகவும் மோசமான நிலையில் கடலரிப்பால் பாதிப்படைந்துள்ளது.

இதனால் சிலவீடுகளும், மீன் வாடிகளும் பாதிப்படைந்துள்ளன. மேலும் தென்மேல் பருவக்காற்று ஆரம்பித்ததால் கடலரிப்பின் நிலை மேலும் வலுவடைய வாய்ப்புள்ளது. அத்துடன் இந்த நிலை தொடருமானால் அருகிலுள்ள ஆலயம் மற்றும் சில குடியிருப்புக்களும் காணாமல் போக வாய்ப்புள்ளதாகவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். எனவே இதை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் கொண்டு இந்த ஊரைக் காப்பாற்றுமாறு வேண்டுகோள் விடுக்கின்றனர்.



# திண்ணையும் தனிமையாயிற்று!

என்னதான் வாழ்க்கை கால ஓட்டத்துக்கு ஏற்ப இசைவாக்கமடைந்து நாகரிக வளர்ச்சி என்ற போர்வையில் தன்னை வடிவமைத்துக் கொண்டாலும், நீங்காத வாழ்க்கை என்றால் அது எப்பொழுதுமே கிராமத்து வாழ்க்கை முறைதான். பச்சைப் பசேலென்ற வயல்வெளிகள், மண்வாசனை மாறாத முற்றம், நாற்சார் வீடுகள், மண்ணால் மெழுகி சமப்படுத்திய குளிர்மையான குடிசையின் தரை, சுத்தமான காற்று, சுத்தமான குடி தண்ணீர் ஆரோக்கியம் நிறைந்த பாரம்பரியமான உணவுகள் என்று பட்டியலிடும் அளவுக்குச் சுதந்திரமான வாழ்க்கையை வாழ்ந்தார்கள். இன்றைய இயந்திர வாழ்க்கைக்கு அந்தப் பொக்கிஷத்தின் அருமை ஒருபோதும் தெரியப்போவதில்லை.

இதில் முக்கியமான பேசு பொருளாக அமைவது பண்டைய வீடமைப்பு முறைதான். அதிலும் குறிப்பாக “திண்ணையை” இணைத்துக் கட்டப்படும் வீடுகள் மையப்புள்ளியாக அமைகின்றன. திண்ணை எப்பொழுதும் தனக்கான தனி இடத்தைப் பெற்றிருந்தது. இன்றைய காலத் தலைமுறையினரிடம் “ திண்ணை என்றால் என்னவென்று தெரியுமா? ”என்று கேட்டால் திண்ணை என்றால் விடுதியா? என்று பதிலுக்கு கேட்கின்றனர். ஆனால் உயிர்த்துடிப்பான மனிதர்களை இணைத்த பாலம் திண்ணை என்பது பலருக்கும் தெரியவில்லை.

திண்ணை வெறுமனே வார்த்தையல்ல. பெருந்தாகத்தை தணித்த தடாகம் என்பதே அதன் உள்ளார்ந்த அர்த்தம். இன்று தரையில் அமருவதற்கே சிரமப்படுகின்றார்கள். ஆனால் அன்று திண்ணையிலே பல மணி நேரத்தைச் செலவழித்துக் கொண்டார்கள். மனம் திறந்து பேசினார்கள். திண்ணையில் அமர்ந்து ஊர்ப் பிரச்சினைகளைப் பேசிக் கொண்டார்கள். தாத்தாவும் பாட்டியும் சலிக்காமல் கதைகளைக் கூறினார்கள். தமது அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டார்கள்.அதே வேளை, திருமணம், விழாக்கள் என மகிழ்ச்சியான தருணங்களாயினும் சரி மரணச் சடங்கு போன்ற சோகமான தருணங்களாயினும் சரி திண்ணையில் அமர்ந்திருந்து தான் அதற்கான ஆலோசனைகளை வழங்கினார்கள். இங்குதான் கிசுகிசுக்களும் குறைவில்லாமல் கலந்துரையாடப்பட்டன.



**ரம்மியா புஸ்பகரன்.**
**ஊடகக் கற்கைகள் துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

அத்தோடு பண்பாட்டு நினைவுகள் பரம்பரை பரம்பரையாக கடத்தப்பட்ட நிகழ்வுகளும் இங்கு தான் நிகழ்ந்தேறின. பயணிகள் தமது பயணத்தின் போது ஏற்படும் களைப்பைப் போக்கிக் கொள்ளவும் இளைப்பாறி உணவருந்திச் செல்லவும் திண்ணை தன்னை அர்ப்பணித்தது. வழிப்போக்கர்கள் நெடுந்தூரம் பயணித்தால் இளைப்பாறிக் கொள்வதற்குத் தேடுவது முதலில் திண்ணையைத் தான். அந்தளவுக்குச் சிறப்பு வாய்ந்ததாக இந்தத் திண்ணை காணப்பட்டது.

முன்னைய காலங்களில் கட்டப்படும் வீட்டுடன் இணைத்தும் திண்ணையை அமைப்பார்கள். வீட்டுக்கு வெளியேயும் திண்ணையை அமைப்பார்கள். அதேவேளை பொதுவான இடங்களில் பஸ் தரிப்பிடம், தண்ணீர்க் குழாய் என்பவற்றை அமைப்பது போல திண்ணையும் பொது நலன் கருதி அமைக்கப்பட்டது. மனித உறவுகளை மேம்படுத்திய மையப்புள்ளி என்ற பெருமையும் திண்ணையையே சாரும்.

பெண்களுக்கும் திண்ணைக்கும் இடையிலான தொடர்பு என்று பார்க்கும் பொழுது முன்னைய காலங்களில் பெண்கள் வெளி உலகம் தெரியாமல் வளர்க்கப்பட்டார்கள். வீட்டுப் பணி செய்வதோடு அவர்களது நாள் பொழுது நகர்ந்தது. பின்னர் படிப்படியாக வளர்ச்சி கண்டார்கள். அவ்வாறான பொழுதுகளில் வீட்டைக் கடந்து வெளியில் வந்தார்கள். அதில் திண்ணை முக்கிய இடம் வகிக்கின்றது. திண்ணையில் அமர்ந்து தமது மனதிலுள்ள பாரத்தை ஏனையவர்களுடன் பரிமாறிக் கொண்டார்கள். வீட்டு வேலைகளை முடித்துவிட்டு திண்ணையில் அமர்ந்து கதைப்பதற்கான நேரத்தைத் தேடிக் கொண்டார்கள். பல்லாங்குழி விளையாடுவது, வேலைக் களைப்புத் தெரியாமல் கதைத்துக் கொண்டு திண்ணையில் அமர்ந்து வேலை செய்வது, ஒன்றாக அமர்ந்து கைகளுக்கு மருதாணி போடுவது எனப் பல சம்பவங்கள் திண்ணையில் நிகழ்ந்தன.

அன்று வீட்டுக்கு வீடு தொலைபேசி இருந்திருக்கவில்லை. தொலைக்காட்சியும் இருந்திருக்கவில்லை. ஆனாலும் எந்தக் குறையும் இல்லாமல் தான் வாழ்ந்தார்கள். இன்றைய சூழலில் பெண்கள் உயர் பதவிகள், கல்வி, பொருளாதார நிலையில் உச்சம் தொட்டாலும் தங்களின் வாழ்க்கையைத் தனியாகச் சுருக்கி வாழுமளவுக்கு வளர்ந்துவிட்டார்கள். கலகலப்புக் குறைந்து

**தொடர்ச்சி▼**



# திண்ணையும் தனிமையாயிற்று!

**தொடர்ச்சி▲**

விட்டது. போராடிக் கடக்க வேண்டும் என்ற பாதையில் அவர்களின் வாழ்க்கைக் கோலமும் மாறிவிட்டது. பெண்களுக்குச் சுதந்திரம் கிடைத்துவிட்டது. அவர்கள் சுதந்திரமாக வாழ்கின்றார்கள். ஆனால் அது நிறைவான சுதந்திரம் இல்லை என்பதே மறைமுகமான உண்மை.

முதியோர் வாழ்வில் திண்ணையின் பங்கு என்று பார்க்கும் பொழுது அவர்களின் ஓய்விடமாகத் திண்ணை அமைந்தது. தரையில் துணி ஒன்றைப் போட்டு விட்டு ஒய்யாரமாகப் படுத்துறங்கினார்கள். அதிலிருந்து தான் கதைத்தார்கள்இ நன்மை தீமைகளைப் பகிர்ந்தார்கள். பஞ்சாயத்துக் கதைகளைப் பேசினார்கள். முக்கியமான முடிவுகளையும் எடுத்தார்கள். இப்படியிருந்த முதியவர்களின் நிலை இன்று தலை கீழாகத் தடம் புரண்டுள்ளது. முன்னைய காலங்களில் வீட்டில் கட்டாயம் முதியவரொருவர் இருக்க வேண்டுமென்று எண்ணினார்கள். ஆனால் இன்று அவர்களைச் சுமையாகப் பார்க்கின்றார்கள். தனிமை என்ற இருள் சூழ புறக்கணிக்கப்பட்டு ஆல விருட்சம் போல இருந்தவர்கள் இன்று தனி மரமாக முதியோர்கள் இல்லங்களில் தவித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

சிறுவர்களின் கல்வியின் ஆரம்பப் புள்ளியாகத் திண்ணை அமைந்து காணப்படுகின்றது. திண்ணையில் அமர்ந்துதான் படித்தார்கள். விளையாடினார்கள். தாத்தா- பாட்டியின் கதைகளைக் கேட்டு மகிழ்ந்தார்கள். அவர்களின் அறிவுப் பெட்டகம் சங்கமித்த முதல் இடம் திண்ணை தான் எனலாம். ஆனால் இன்றைய சிறுவர்களின் வாழ்க்கைக் கோலம் முற்றாக மாறியிருக்கின்றது. உடல்நலத்துக்கு நன்மையளிக்கும் விளையாட்டுகளைப் புறக்கணித்துவிட்டு இன்று திறன் கைத் தொலைபேசிகளில் நிகழ்நிலை விளையாட்டுகளை விளையாடுகின்றார்கள். அவற்றுக்கு அடிமையாகி தமது உயிரையும் மாய்த்துக் கொள்கிறார்கள். சமூகத்துக்கும் அவர்களுக்குமிடையிலான இடைவெளி மேலும் விரிசலாகிக் கொண்டே செல்கின்றது.

இப்படியிருந்த திண்ணை மறைந்தமைக்கும் காரணங்கள் இருக்கின்றன. அதில் ஒன்று வாழ்க்கை முறை மாறியமை எனலாம். வேகமாக வாழ்க்கை முறை மாறியிருக்கின்றது. உணவு, உடை, உறையுள் என அனைத்திலும் மாற்றம் நிகழ்ந்திருக்கின்றது. பரபரப்புக்குப் பஞ்சமில்லாத வாழ்க்கை முறைமை. கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறையைத் தவிர்த்துத் தனிக் குடும்பமாக வாழ்கின்றார்கள். தினம் தினம் யுத்தத்தைக் கடந்து தான் அவர்களது வாழ்க்கை முறை நகர்கின்றது. “பணம்” சம்பாதித்தால் போதும் என்ற மனநிலையே அவர்களிடத்தில் காணப்படுகின்றது. உறவுகளைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணமில்லை. மற்றவர்களோடு அன்பாக நடந்து கொள்ள வேண்டுமென்றும் எண்ணமில்லை. வேலை நேர அழுத்தத்தைப் பகிர்ந்து கொள்ளாமல் தமக்குள்ளேயே புதைத்துக் கொள்கின்றார்கள். வீடமைப்பு முறைகளும் மாறியிருப்பதும் திண்ணை மறைந்ததற்கான காரணியாக அமைகின்றது.

முன் வீட்டில் இரண்டு மாடி வீடு கட்டினால், எதிர்வீட்டில் மூன்று மாடி வீடு கட்ட வேண்டும் என்ற மனநிலையோடு வாழ்கின்றார்கள். அந்தளவுக்கு அடுக்குமாடிக் குடியிருப்புகள் வளர்ந்துள்ளன. கதவுகள் எப்போதும் மூடப்படும் நிலையில் வீடுகள் அமைக்கப்படுகின்றன. சீனச் சுவர்களைப் போல எதிர் வீட்டில் இருந்து பார்த்தால் தெரியாத அளவிற்கு மதில்களையும் கட்டுகின்றனர். தொலைபேசி, தொலைக்காட்சியின் அதீத வளர்ச்சியால் சமூகத்தில் பல மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன. இவற்றோடு பொழுதுகள் நகர்வதால் அருகில் இருப்பவர்களைக் கண்டு கொள்வதில்லை. எண்ணற்ற தொடர்பாடல் முறைகள் விரிவடைந்துள்ளன. ஆனால் அருகில் இருப்பவர்களோடு தான் தொடர்பாடல் துண்டிக்கப்பட்டுள்ளது. மற்றவர்களோடு மனம் விட்டுப் பேசுவதில்லை. மற்றவர்களின் நலனில் அக்கறை கொள்வதில்லை. அவரவர் வேலைகளை மாத்திரமே பார்க்கின்றார்கள். இவ்வாறான சூழ்நிலைகளே இன்று திண்ணை மறைந்தமைக்கான காரணிகளாக அமைகின்றன. உண்மையில் திண்ணை அழிந்தது கட்டட மற்றும் தொழில்நுட்ப மாற்றங்களினால் அல்ல. மனித மனங்களின் மாற்றங்களால்தான்.

திண்ணை இல்லாதுவிடினும் மனித மனங்களிலாவது திண்ணை இருக்க வேண்டும். இன்று திண்ணையைப் போலவே மனிதனது மனமும் தனிமையாகி விட்டது. ஒரு காலத்தில் மனிதர்களை இணைத்த திண்ணை இன்று பயன்பாடற்றதாகி தனிமையைச் சுமந்து நிற்கின்றது. உண்மையில் திண்ணை தனிமையாகியிருக்கின்றது என்பதை எண்ணி வருந்துவதற்கு முன்னர் நாம் எவ்வளவு தூரம் ஒருவருக்கொருவர் தூரமாகிச் சென்று விட்டோம் என்பதைப் பார்க்க வேண்டும்.

# அ.தி.மு.க. கூட்டணியில் ஓரிரு நாள்களில் புதிய கட்சி

## பழனிசாமி பரபரப்புத் தகவல்



அ.தி.மு.க. கூட்டணியில் ஓரிரு நாளில் புதிய கட்சி இணைய இருப்பதாக, தேர்தலில் போட்டியிட விருப்ப மனு அளித்தவர்களுடனான நேர் காணலில் பொதுச்செயலாளர் பழனிசாமி தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவை தேர்தலில் அ.தி.மு.க. சார்பில் போட்டியிட விருப்பம் உள்ளவர்களிடம் இருந்து கடந்த மாதம் விருப்ப மனுக்களை கட்சி தலைமை பெற்றது. இதில், மொத்தம் 10,175 விருப்ப மனுக்கள் பெறப்பட்டன. அதில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பழனிசாமி தங்களின் தொகுதியில் போட்டியிட வேண்டும் என 2,187 பேர் விருப்ப மனு அளித்திருந்தனர்.

தேர்தல் போட்டியிட விருப்ப மனு அளித்தவர்களுடனான நேர்காணல், சென்னை ராயப்பேட்டையில் உள்ள கட்சித் தலைமை அலுவலகத்தில், கடந்த 9 ஆம் திகதி முதல் நடைபெற்று வருகிறது. பொதுச்செயலாளர் பழனிசாமி நேர்காணல் செய்து வருகிறார். 3 ஆம் நாளான நேற்றும் நடைபெற்றது. இந்த நேர்காணலின் போது பழனிசாமி உரையாற்றுகையில்,

"தேர்தல் நெருங்கி வருகிறது. அ.தி.மு.கவினர் அனைவரும் பொது மக்களுடன் நெருக்கமாக இருக்க வேண்டும். தி.மு.க. அரசால் பொது மக்களுக்கு இடையூறு ஏற்பட்டால், பொதுமக்களுக்கு ஆதரவாக அ.தி.மு.கவினர் நிற்க வேண்டும். 5 ஆண்டு தி.மு.க. அரசின் மக்கள் விரோத செயல்கள், தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றாதது, அ.தி.மு.க. அரசு கொண்டு வந்த திட்டங்களை நிறுத்தியது உள்ளிட்டவற்றை விளக்கி சொல்ல வேண்டும்.

விரைவில் சில முக்கிய கட்சிகள் அ.தி.மு.க. கூட்டணியில் இணைய உள்ளன. ஓரிரு நாளில் புதிய கட்சி ஒன்று இணைய உள்ளது. தமிழகத்தில் பலமான கூட்டணி, அ.தி.மு.க. தலைமையில் அமையும். அதனால் அ.தி.மு.கவின் வெற்றி குறித்து தொண்டர்கள் யாரும் கவலைப்பட வேண்டாம். கட்சி பணிகளை தீவிரமாக செய்யுங்கள். உங்களில் பலருக்கு வாய்ப்பு கிடைக்காமல் போகலாம். சில தொகுதிகளை கூட்டணி கட்சிகளுக்கு ஒதுக்கலாம். இருப்பினும், அதிமுக கூட்டணியின் வெற்றிக்கு அனைவரும் பாடுபட வேண்டும்."" என்று தெரிவித்துள்ளார்.

# 'ஜனநாயகன்' பட விவகாரத்தில் விஜய்க்கு ராகுல் ஆதரவுக் குரல்





"ஜனநாயகன்' திரைப் படத்தை மத்திய தகவல், ஒலி பரப்பு அமைச்சகம் தடுக்க நினைப்பது தமிழ் கலாசாரத்தின் மீதான தாக்குதல் என்று காங்கிரஸ் மக்களவை எதிர்க் கட்சித் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

ஜனவரி 9 ஆம் திகதி வெளியாக இருந்த விஜய்யின் 'ஜன நாயகன்' திரைப்படம் தணிக்கை பிரச்சினையால் வெளியாகவில்லை. இந்த விவகாரம் இப்போது நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

இதற்கிடையில், 'ஜனநாயகன்' திரைப்பட சர்ச்சை தொடர்பாக காங்கிரஸார் குரல் கொடுத்து வருகின்றனர். காங்கிரஸ் எம்.பி. ஜோதிமணி, தமிழக காங்கிரஸ் மேலிட பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் எனப் பலரும் விஜய்யின் 'ஜனநாயகன்' படத்துக்கு ஆதரவாக பேசிவிட்டனர்.

இந்நிலையில் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும், மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி தற்போது 'ஜனநாயகன்' படத்துக்கு ஆதரவாகக் குரல் கொடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் பக்கத்தில், ""ஜனநாயகன்' திரைப்படத்தை மத்திய தகவல், ஒலிபரப்பு அமைச்சகம் தடுக்க நினைப்பது தமிழ் கலாசாரத்தின் மீதான தாக்குதல். தமிழக மக்களின் குரலை அடக்கி, நீங்கள் எப்போதும் வெல்ல முடியாது மோடி அவர்களே!" என்று பதிவிட்டுள்ளார்.

# பொங்கல் பரிசுத் தொகை வழங்குங்கள்

# புதுவையில் அ.தி.மு.கவினர் ஆர்ப்பாட்டம்

பொங்கல் பரிசுத் தொகையாக 5,000 இந்திய ரூபா வழங்க புதுச்சேரி அரசை வலியுறுத்தி என்.டி.ஏ. கூட்டணியிலுள்ள அ.தி.மு.க. சார்பில் இன்று பொங்கல் பானையுடன் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

புதுச்சேரி மாநில அ.தி.மு.க. சார்பில் பொங்கல் உதவி தொகையாக 5,000 ரூபா வழங்க வேண்டும் என்று முதல்வர் ரங்கசாமியை சந்தித்து அ.தி.மு.க. மாநில செயலாளர் அன்பழகன் கோரிக்கை வைத்திருந்தார். இந்த நிலையில் பொங்கல் உதவித் தொகை 3,500 ரூபா வழங்குவதற்காக கோப்புகளை தயாரிப்பு செய்து, ஆளுநருக்கு ரங்கசாமி நேற்று இரவு அனுப்பி வைத்துள்ளார்.

இதனிடையே, பொங்கல் பரிசுத் தொகையை 5,000 ரூபாவாக உயர்த்தி வழங்க புதுச்சேரி அரசை வலியுறுத்தி அ.தி.மு.க. சார்பில் மாநிலச் செயலாளர் அன்பழகன் தலைமையில் இன்று அண்ணா சிலை அருகே கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட அதிமுகவினர் கையில் பொங்கல் பானைகளுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது ஆளும் அரசுக்கு எதிராக 5,000 ரூபா வழங்கக் கோரி கண்டன கோஷங்களை எழுப்பியுள்ளனர்.



# ஒரு லட்சத்திற்கு மேற்பட்டோரின் விசாக்களை அதிரடியாக ரத்துச் செய்தது அமெரிக்க அரசு

அமெரிக்காவில் சட்டவிரோத மற்றும் குற்ற செயல்களில் ஈடுபட்டவர்கள் உட்பட ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டவர்களின் விசாக்களை அமெரிக்கா அதிரடியாக இரத்து செய்துள்ளது.

இதுபற்றி அந்நாட்டின் வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்தியில், 8 ஆயிரம் மாணவர் விசாக்கள் மற்றும் குற்ற செயல்களில் ஈடுபட்டு அமெரிக்க பொலிஸாருடன் மோதலில் ஈடுபட்ட 2,500 தனிநபர் விசாக்கள் உள்ளிட்ட 1 லட்சத்திற்கும் மேற்பட்டவர்களின் விசாக்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன எனவும் இதன்பின்னர் அவர்கள் அமெரிக்காவில் இருந்து நாடு கடத்தப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




அமெரிக்காவில் ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பொறுப்பேற்று கொண்ட பின்னர், குடியேற்ற விதிகள் மற்றும் சட்டங்களை அரசு தீவிரப்படுத்தி வருகின்றது.

இந்நிலையில், தேச பாதுகாப்பை வலுப்படுத்தவும் மற்றும் குடியேற்ற சட்டங்களை அமுல்படுத்தவும் நடந்து வரும் முயற்சிகளின் ஒரு பகுதியாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

சமீபத்தில் இந்தியாவிலுள்ள அமெரிக்க தூதரகம் வெளியிட்ட செய்தியில், அமெரிக்கசட்டங்களைமீறிநடந்துகொள்பவர்கள், குறிப்பாக மாணவர்கள் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என எச்சரித்து இருந்தது.

இதனால், அவர்களின் விசாக்கள் இரத்து செய்யப்படுவதுடன், நாடு கடத்தவும் செய்யப்படுவார்கள்.

வருங்காலத்தில் அமெரிக்க விசா பெற தகுதியற்றவர்களாகவும் ஆகிவிடுவார்கள்.

# ஈரானுடன் வர்த்தகம் செய்யும் நாடுகளுக்கு 25 வீத வரி விதிப்பு உடனடியாக அமலுக்கு

## டொனால்ட் ட்ரம்ப் அறிவிப்பு



ஈரானுடன் வர்த்தகம் செய்யும் நாடுகளுக்கு 25 வீத வரி விதிப்பு உடனடியாக அமலுக்கு வருவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

“ஈரான் அரசுடன் வர்த்தகம் செய்யும் எந்தவொரு நாடும் அமெரிக்காவுடன் மேற்கொள்ளும் வணிகத்திற்கு 25 வீத வரி செலுத்த வேண்டும். இந்த உத்தரவு இறுதியானது”என்று ட்ரம்ப் தனது ட்ரூத் சோஷியல் சமூக வலைதளப் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வரியால் சீனா, இந்தியா, பிரேசில் உள்ளிட்ட நாடுகளுக்கு அதிக பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஈரானுடன் வர்த்தக தொடர்பில் இருக்கும் முக்கிய 5 நாடுகளில் இவை உள்ளன. துருக்கி, ஐக்கிய அரபு அமீரகமும் பாதிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த புதிய வரிவிதிப்புக்குப் பின்னால் ஈரானில் நடைபெறும் போராட்டங்கள் உள்ளன. ஈரான் அணு ஆயுத தயாரிப்பில் ஈடுபட்டதால், அந்நாட்டின் மீது சர்வதேச தடைகள் விதிக்கப்பட்டன. இதன் காரணமாக ஈரானின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது. இதனால் ஈரான் மக்கள் ஆட்சியாளர்களுக்கு எதிராக கடந்த மாதம் 28 ஆம் திகதி போராட்டத்தில் குதித்தனர். இவர்கள் மீது ஈரான் பாதுகாப்பு படையினர் தாக்குதல் நடத்தியதில் இதுவரை 203 பேர் இறந்துள்ளனர். 2,600 பேர் காயம் அடைந்துள்ளனர். போன் இணைப்புகள் மற்றும் இணையதள இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

இதற்குகண்டனம்தெரிவித்தஅமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், ”ஈரான் சுதந்திரத்தை எதிர்நோக்கியுள்ளது. அங்கு இதுவரை இல்லாத அளவில் போராட்டம் நடைபெறுகிறது. ஈரான் மக்களுக்கு உதவ அமெரிக்கா தயாராக இருக்கிறது” என தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் ஈரான் மீது தாக்குதல் நடத்த ட்ரம்ப் திட்டமிட்டுள்ளார். ஆனால் அவர் இன்னும் இறுதி முடிவு எடுக்கவில்லை என அமெரிக்க இதழ்களில் செய்தி வெளியானது. ஆனால், படையெடுப்புக்கு முனோட்டமாக அமெரிக்கா வரி விதிப்பைத் தொடங்கியுள்ளது.

# குரோக் செயற்கை நுண்ணறிவுத் தளம் மீது ஒழுங்குமுறை நடவடிக்கை எடுக்கப்படும்




## பிரித்தானியப் பிரதமர் எச்சரிக்கை

எக்ஸ் தளத்தின் குரோக் செயற்கை நுண்ணறிவு, பெண்களையும் குழந்தைகளையும் ஆபாசமாக சித்தரிக்கும் படங்களை உருவாக்குவது பல நாடுகளில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்த விவகாரத்தில் அந்நிறுவனம் தற்கட்டுப்பாட்டுடன் செயல்படாவிட்டால், பிரித்தானிய அரசாங்கம் கடுமையான ஒழுங்குமுறை நடவடிக்கைகளை எடுக்கும் என பிரித்தானிய பிரதமர் கீர் ஸ்டார்மர் எச்சரித்துள்ளார்.

இத்தகைய அத்துமீறல்களைத் தடுக்க அந்நாட்டு அரசு புதிய சட்ட திருத்தங்களை விரைவுபடுத்துவதுடன், இந்தத் தளம் மீதான முறையான விசாரணையையும் தொடங்கியுள்ளது.

சமூக ஊடகங்கள் லாபத்திற்காக இத்தகைய தீய செயல்களை அனுமதிப்பதை அனுமதிக்க முடியாது என்பதில் பிரித்தானியா உறுதியாக உள்ளது.

இந்நிலையில் இதே தொழில்நுட்பத்தை அமெரிக்க பாதுகாப்புத் தலைமையகமான பென்டகன் தனது பயன்பாட்டிற்கு இணைக்க முடிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில், எலோன் மஸ்க் இந்த நடவடிக்கைகளை கருத்து சுதந்திரத்திற்கு எதிரான தணிக்கை என்று விமர்சித்துள்ளார்.

கனடா முரசு
பக்கங்கள் - 03
செவ்வாய்க்கிழமை 13/01/2026

## மான் வேட்டையாடிய மூவருக்கு அபராதம்



C3▶







# அயலக தேசங்களில் தமிழ் மரபை வளர்ப்பதில் புலம்பெயர் தமிழருக்கு முக்கிய பங்கு உள்ளது

## கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் ஜுவானிடா நாதன் தெரிவிப்பு

“தமிழர் உலகம் முழுவதும் பெரும் ஆளுமையாக வளர்ந்து வருகிறார்கள். அயலக தேசங்களில் தமிழ் மரபு, பண்பாடு மற்றும் மொழியை பாதுகாத்தும் வளர்த்தும் வருவதில் புலம்பெயர் தமிழருக்கு முக்கிய பங்குண்டு.”

- இவ்வாறு கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் ஜுவானிடா நாதன் தெரிவித்தார்.

C2▶





# டொராண்டோவில் குடியேற்ற எதிர்ப்பு போராட்டத்தில் மோதல்; 8 பேர் கைது





கனடாவின் டொராண்டோ நகர மையத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற போராட்டத்தின் போது, 8 பேரை கைது செய்து 29 குற்றச்சாட்டுகளை பதிவு செய்துள்ளதாக டொராண்டோ பொலிஸ் தெரிவித்துள்ளது.

குயீன் ஸ்ட்ரீட் வெஸ்ட் – பே ஸ்ட்ரீட் சந்திப்பிற்கு அருகிலுள்ள நாதன் பிலிப்ஸ் ஸ்கொயரில் நடைபெற்ற போராட்டத்திற்கு பொலிஸ் அதிகாரிகள் சென்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடியேற்றத்திற்கு எதிராக நடைபெற்ற இந்த பேரணியில் பலர் கலந்து கொண்டனர்.

அமைதியை நிலைநாட்டும் நோக்கில் அதிகாரிகள் போராட்டத்தில் பங்கேற்றவர்களுக்கு வழிகாட்டுதல்களை வழங்கியிருந்தாலும், சிலர் குழப்பம் ஏற்படுத்தியதுடன், மற்ற பங்கேற்பாளர்களையும், இறுதியில்

C2▶

## அயலக தேசங்களில்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)



உலக அயலகத் தமிழர் தினம் 2026 நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

‘உலகத் தமிழர்களை ஒன்றிணைத்து தமிழரின் கலாச்சாரம். பாரம்பரியம், மற்றும் ஒற்றுமையைக் கொண்டாடும் உலக அயலகத் தமிழர் தினம் 202 இற்கு என்னை அழைத்தமைக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கும் ஒருங்கிணைப்பாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். புலம்பெயர் தேசத்தில் வாழும் தமிழராக, கனடிய மண்ணின் மக்கள் சார்பில் இந்த நிகழ்வில் பங்கேற்பதில் பெரு மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கின்றேன்.

தமிழர் உலகம் முழுவதும் பெரும் ஆளுமையாக வளர்ந்து வருகிறார்கள். அயலக தேசங்களில் தமிழ் மரபு, பண்பாடு மற்றும் மொழியை பாதுகாத்தும் வளர்த்தும் வருவதில் புலம்பெயர் தமிழருக்கு முக்கிய பங்குண்டு. அதுமட்டும்

அல்லாது வர்த்தக பொருளாதார துறைகளிலும் தமிழர் உலகம் முழுவதும் பெரும் ஆளுமைகளாக வளர்ந்து வருகின்றனர்.

அரசியல் அரங்கங்களில் புலம்பெயர் தமிழர்களின் பங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியது. இவ்வாறு பல வழிகளிலும், துறைகளிலும் புலம் பெயர் தேசங்களில் தமிழர் மரபையும். திறனையும், ஆளுமைகளையும் கட்டிக்காத்து வளர்ந்து வரும் தமிழர்களுக்கு அங்கீகாரத்தை ஏற்படுத்தும் வகையில் இந்த நிகழ்வை ஒருங்கிணைத்து நடத்தி வருவதற்காக தமிழ்நாடு அரசிற்கு எனது பாராட்டுக்களை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கனடா மற்றும் இந்தியா 75 ஆண்டுகளுக்கும் மேலாக வலுவான தூதரக உறவுகளை பேணிவருகின்றன. இந்த சந்தர்ப்பத்தில்கனடா இந்தியா உறவு வர்த்தகம், முதலீடு மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு வழியாக மேலும் வலுப்பெற்று வருகின்றது. இது தொடர்பாக கனடிய அரசாங்கம் தொடர்ந்தும் இந்தியாவுடன் இணைந்து செயற்படும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த பொருளாதார உறவுகளில், தமிழ்நாடும் கனடாவில் வாழும் தமிழ் புலம்பெயர் சமூகமும் வணிகம் மற்றும் முதலீட்டின் மூலமும், அறிவுப் பகிர்வின் மூலமும் முக்கிய பங்களிப்பை வழங்க முடியும் எனவும் நான் நம்புகின்றேன். கனடாவைப் பொறுத்தவரையில் கனடாவில் இலங்கையிலிருந்து குடியேறிய கணிசமான எண்ணிக்கையிலான தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

ஈழத்தமிழர்களாக இருந்த போதும் தமிழர்களாக இவர்கள் பல நூற்றாண்டுகளாக தமிழ்நாட்டு மக்களுடன் பிரிக்க முடியாத உறவை மொழி சார்ந்தும் பண்பாடு சார்ந்தும் பகிர்ந்து வருகின்றனர். உலகம் முழுவதும் சுமார் 10 கோடி தமிழர் வாழும் நிலையில், கனடா மிகப்பெரிய தமிழ் புலம்பெயர் சமூகமாக காணப்படுகிறது. இந்நிலையில், கனடிய தமிழர்களும் தமிழ்நாட்டு மக்களும் இணைந்து, உலகத்தமிழ்சமூகத்தின்பண்பாட்டு,மொழி மற்றும் பொருளாதார முன்னேற்றத்தை வடிவமைப்பதில் அர்த்தமுள்ள பங்கை வகிக்க முடியும் என நான் நம்புகின்றேன். அதே நேரத்தில் நாம் வசிக்கும், வாழும் நாடுகளின் தேசிய அளவிலான பொருளாதார வளர்ச்சிக்கும் இதன்மூலம் பங்களிக்க முடியும்.

தமிழ்நாடு அரசு உலகம் முழுவதிலும் வாழும் தமிழ் மக்களுடன் இணைந்து தமிழ் வளர்ச்சிக்காக முன்னெடுத்துவரும் செயற்பாடுகள் குறித்தும் இந்த நேரத்தில் நான் பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

முக்கியமாக தமிழ் கற்கைகளை மேலைத்தேய நாடுகளில் நிறுவுவதற்கு தமிழ்நாட்டு அரசு எடுத்துவரும் முயற்சிகள் பாராட்டத்தக்கவை. குறிப்பாக கனடாவின் முதன்மையான பல்கலைக்கழகங்களில் ஒன்றான ரொறன்றோ பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை ஒன்றினை புலம்பெயர் தமிழர்கள் நிறுவுவதற்கான முயற்சிகளை எடுத்திருந்த போது தமிழ்நாடு அரசும், திராவிட முன்னேற்ற கழகமும் அதற்காக பெரும் உதவிகளை வழங்கியிருந்தது. இதற்காக தமிழ் நாட்டு அரசிற்கும், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் எனது பாராட்டுக்களை தமிழ் கனடியர்கள் சார்பில் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதுமட்டும் அல்லாது ஈழத் தமிழ் அகதிகளுக்கு தமிழ்நாட்டு அரசாங்கம் வழங்கிவருகின்ற உதவிகளும், ஆதரவுகளும் மிக முக்கியமானவை. ஈழத் தமிழராக கனடிய மண்ணில் புலம்பெயர்ந்து இன்று கனடாவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியுள்ள நான் தமிழ் நாடு அரசு ஈழ தமிழ் அகதிகளுக்கு செய்த, செய்கின்ற அனைத்து உதவிகளுக்கும் நன்றியைச் சொல்லிக்கொள்ள இந்த நேரத்தில் கடமைப்பட்டுள்ளேன்.

என் உரையை நிறைவு செய்வதற்கு முன்பாக தமிழ்நாட்டு அரசாங்கத்திடம் ஒரு கோரிக்கையை முன்வைக்க விரும்புகின்றேன். தமிழ்நாடு பொருளாதார செயற்பாடுகளில் எடுத்துக் காட்டாகவும், மிகவும் சிறப்பாகவும் வளர்ந்து வருகின்றது. அதை சாத்தியமாக்கிக் கொண்டிருக்கின்ற அரசாங்கத்திற்கு பாராட்டுக்களை சொல்லிக் கொள்வதுடன், இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தமது பொருளாதாரத்தை மீண்டும் கட்டமைக்க பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். பொருளாதாரத்தில் சிறப்பாக இருக்கும் தமிழ் நாட்டின் அரசினால் ஈழத் தமிழருக்கு உதவமுடியும் என நான் நம்புகின்றேன். அதற்கான வலுவும், வளமும் தமிழ் நாட்டிற்கு உண்டு. தமிழக வணிகர் இலங்கையின் தமிழ் பிரதேசங்களில் முதலிடுவதற்கு தமிழ் நாட்டு அரசு ஊக்கமளிக்க வேண்டும் என்பதை இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

இதன் மூலம் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தங்களின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியும் என்பதுடன் அதன் மூலம் தமிழ் நாடும் நன்மைகளை அடைய முடியும்.

இதற்கான செயற்பாடுகளில் உதவுவதற்கு கனடிய தமிழர்கள் உட்பட அனைத்து புலம்பெயர் தமிழ் சமூகங்களும் தமிழ் நாட்டு அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட முன்வரும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

தமிழர்களாக உலகம் முழுவதும் நாம் அனைத்து வகையிலும் வளர்ந்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில் இப்படியான நிகழ்வுகள் மிகவும் முக்கியமானவை. எந்த தேசத்தில் வாழ்ந்தாலும் மொழியால் நாம் என்றும் ஒன்று பட்டவர்கள். எமது மொழியை புலம்பெயர் தேசங்களில் இரண்டாம் தலைமுறையினருக்கும் கடத்த வேண்டிய தேவையும், பொறுப்பும் ஒவ்வொரு புலம்பெயர் தமிழர்களுக்கும் உண்டு. அதை அவர்கள் சிறப்பாக செய்தும் வருகின்றனர். அதற்கு தமிழ்நாடு அரசு தொடர்ந்தும் தனது பங்களிப்பை மேற்கொள்ள வேண்டும். இது போன்ற நிகழ்வுகள் தொடர்ந்தும் சிறப்பாக நடத்தப்பட வேண்டும்.” என்று தெரிவித்தார்.

## டொராண்டோவில்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் அதிகாரிகளையும் தாக்கினர் என கூறப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இந்த போராட்டங்களில் முன்னணியில் பணியாற்றிய அதிகாரிகளுக்கு டொராண்டோ பொலிஸ் தலைவர் மைரன் டெம்கியூ நன்றி தெரிவித்துள்ளார்.

“பொலிஸ் அதிகாரிகள் மீது அல்லது யார்மீதும் மேற்கொள்ளப்படும் இத்தகைய வன்முறை முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது,” என அவர் கூறினார்.

“மக்களை பாதுகாப்பதற்காகவே அதிகாரிகள் பணியாற்றுகிறார்கள் தாக்குதலுக்கு உள்ளாகாமல் தங்கள் கடமையைச் செய்யும் உரிமை அவர்களுக்கு உள்ளது,” எனவும் தெரிவித்தார்.

சட்டத்தை அனைவரும் மதிக்க வேண்டும் என்றும், சட்டப்படி காரணங்கள் உள்ள போது எங்கு நடந்தாலும் போராட்டக்காரர்களாக இருந்தாலும், எதிர்ப்புப்போராட்டக்காரர்களாக இருந்தாலும், கைது மற்றும் குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# போராட்டத்தில் ஈடுபடும் மக்களுக்கு எதிரான ஈரானின் நடவடிக்கைகளுக்கு கனடா கண்டனம்

போராட்டத்தில் ஈடுபடும் மக்களுக்கு எதிரான ஈரானின் கொலை மற்றும் கைது நடவடிக்கைகளுக்கு கனடா கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

அவுஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைந்து வெளியிட்ட கூட்டு அறிக்கையில், போராட்டக்காரர்களுக்கு எதிராக அதிகப்படியான மற்றும் உயிர்ப்பறிக்கும் வன்முறையை பயன்படுத்துவதை ஈரான் உடனடியாக நிறுத்த வேண்டும் என கனடாவின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அனிதா ஆனந்த், வலியுறுத்தியுள்ளார்.



தங்களின் மரியாதைக்கும், அமைதியான போராட்டம் நடத்தும் அடிப்படை உரிமைக்கும் ஈரான் மக்கள் துணிச்சலுடன் குரல் கொடுத்து வருவதைக் கௌரவிக்கிறோம் என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், போராட்டக்காரர்கள் கொல்லப்படுதல், வன்முறை பயன்பாடு, கைது நடவடிக்கைகள், மிரட்டல் உத்திகள் ஆகியவற்றை ஈரான் அரசு தன் சொந்த மக்கள்மீது மேற்கொள்வதை நாங்கள் கடுமையாக கண்டிக்கிறோம் எனவும் அந்த அறிக்கை தெரிவித்துள்ளது.

ஈரான் பாதுகாப்புப் படைகளின் நடவடிக்கைகளால் குறைந்தது 40 பேர் உயிரிழந்துள்ளனர் என அறிக்கை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# கனடாவின் நிதியமைச்சர் அமெரிக்காவுக்கு விஜயம்



கனடா நிதியமைச்சர் பிரான்சுவா – பிலிப் ஷாம்பேன் அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

வர்த்தகம் மற்றும் முக்கிய கனிமங்கள் தொடர்பான உயர்மட்ட ஆலோசனைகளில் பங்கேற்பதற்காக, அமெரிக்காவின் வொஷிங்டன் நகரில் அவர் தங்கியுள்ளார்.

ஜி 7 நாடுகளின் நிதியமைச்சர்கள் மற்றும் ஒரே சிந்தனையைக் கொண்ட பிற நாடுகளின் பிரதிநிதிகளுடன் ஷாம்பேன் சந்திப்புகளை நடத்த உள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அமெரிக்க நிதியமைச்சர் தலைமையில் நடைபெறும் முக்கிய கனிமங்களின் விநியோக சங்கிலிகள் குறித்த நிதியமைச்சர்கள் கூட்டத்திலும் ஷாம்பேன் பங்கேற்க உள்ளார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த டிசம்பரில் பேசிய கனடா நிதியமைச்சர் ஷாம்பேன், கனடாவில் முக்கிய கனிமங்களின் அகழ்வு மற்றும் சுத்திகரிப்பு பணிகளை வேகப்படுத்த வேண்டிய காலம் வந்துவிட்டதாக கூறியிருந்தார்.

அதேசமயம், முக்கிய கனிமங்களில் சீனாவைச் சார்ந்திருக்கும் நிலைமையிலிருந்து ஐரோப்பா விலகுவதற்கு கனடா உதவ முடியும் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

கடந்த ஜூன் மாதம் அல்பர்டா மாகாணத்தின் கானனாஸ்கிஸ் பகுதியில் நடைபெற்ற ஜி 7 உச்சி மாநாட்டில், முக்கிய கனிமங்கள் தொடர்பான செயல் திட்டம் மற்றும் உற்பத்தி கூட்டணி ஆகியவற்றை ஜி7 நாடுகள் தொடங்கின.

அந்த கூட்டணியின் கீழ் செயல்படுத்தப்பட உள்ள முதல் திட்டங்களை கடந்த ஒக்டோபரில் கனடா அறிவித்திருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மான் வேட்டையாடிய மூவருக்கு அபராதம்



கனடாவில் சட்டவிரோதமான முறையில் மான் வேட்டையில் ஈடுபட்ட மூன்று பேருக்கு நீதிமன்றம் அபராதம் விதித்துள்ளது.

கனடாவின் ஒன்டாரியோ மாகாணம், லேக்ஹர்ஸ்ட் பகுதியைச் சேர்ந்த மூன்று பேருக்கு இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

2024 டிசம்பரில் இடம்பெற்ற மான் வேட்டையின் போது மேற்கொள்ளப்பட்ட அனுமதியற்ற நுழைவு மற்றும் உரிமம் தொடர்பான பல்வேறு சட்ட மீறல்களுக்காக மொத்தம் 4,500 கனேடிய டொலர் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்குகள் தொடர்பான விசாரணைகள் கடந்த ஆண்டு மே 8 மற்றும் செப்டம்பர் 11 ஆகிய திகதிகளில் ஒன்டாரியோ நீதிமன்றத்தில் நடைபெற்றன.

பாதுகாப்பு அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் விசாரணை தொடங்கியதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து அந்த அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு சென்று சந்தேக நபர்களை கைது செய்தனர்.

இதனைத் தொடர்ந்து மேற்படி நபர்களுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்து இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் மூவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டனர். இந்த வழக்குடன் ஸகரி பெல் என்பவருக்கு 1,500 டொலர் அபராதமும், ஐந்து ஆண்டுகள் ஒன்டாரியோவில் வேட்டையாட தடையும் விதிக்கப்பட்டது.

ஸ்டுவார்ட் என்பவருக்கு வேட்டைக்காக அனுமதியின்றி நுழைதல் மற்றும் பிறர் தனது உரிமத்தை சட்டவிரோதமாக பயன்படுத்த உதவிய குற்றங்களுக்கு 2,700 டொலர் அபராதம் விதிக்கப்பட்டது.

கட்ரினா பெல் என்பவருக்கு 300 டொலர் அபராதம் மற்றும் ஒரு ஆண்டு வேட்டையாடத் தடை விதிக்கப்பட்டது. இந்த வழக்கு விசாரணைகள் பீட்டர்பரோவில் உள்ள ஒன்டாரியோ நீதிமன்றத்தில் இடம்பெற்றன.